**தலைப்பு 225 – இலங்கை பொலிஸ்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பொலிஸின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸிற்கு சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஜுலை 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை பொலிஸின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு இலங்கை பொலிஸின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொலிஸினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிதி நிலைமைக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியின் படி ரூபா 20,657,144,308 தொகை காணப் பட்டதுடன், 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திறைசேரியின் சொத்துக்கள் அறிக்கையின் பிரகாரம் ரூபா 20,735,157,567 தொகை பெறுமதி காணப்பட்டமையால் ரூபா 78,013,269 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | திறைசேரி ஏடுகளின் பிரகாரம் பெறுமதி மற்றும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி இணக்கஞ் செய்து கணக்குகள் தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிராந்திய உப கணக்கு அலகுகள் 47 இல் இருந்து பெற்றுக்கொண்ட தகவல்களில் இருந்து நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. முரண்பாடுகளை இனங்காண் பதற்கு சமர்ப்பித்திருந்த தரவுகளின் சரியான தன்மையை பரிசோதனை செய்ய வேண்டும். இந்த செயற்பாடு விரைவாக பூர்த்தி செய்ய முடியுமாக இருக்காத துடன் உரிய முரண்பாடுகள் இணங்காணும் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| (ii) | 2018.12.31 திகதியில் உள்ளவாறு திறைசேரித் திணைக்களம் சமர்ப்பித்திருந்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 829,876,521 தொகையாக காணப்பட்டதுடன், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 825,622,408 தொகை ஆகக் காணப்பட்டமையால் ரூபா 4,194,114 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | பிராந்திய உப கணக்கு அலகுகள் 47 இனைக் கொண்டுள்ள இலங்கை பொலிஸ் உரிய உப கணக்கு அலகுகளில் இருந்து பெற்றுக் கொள்ளும் தகவல்களில் இருந்து நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த முரண்பாடுகளை இனங்காண் பதற்கு சமர்ப்பித்திருந்த தரவுகளின் தன்மையை பரிசோதனை செய்ய வேண்டும். இந்த செயற்பாடு விரைவாக பூர்த்தி செய்ய முடியுமாக இருக்காததுடன் உரிய முரண்பாடுகள் இணங்காணும் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

### 1.6.2 பொது வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆண்டின் போது சார்க் பயங்கரவாத மற்றும் போதைப் பொருள் குற்றங்கள் அவதானிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக இந்தியாவில் இருந்து வழங்கப் பட்ட ரூபா 11,503,192 தொகை உரிய கருமம் நிறைவேற்றப் படாமல் மற்றும் திறைசேரியின் அங்கீகாரம் இன்றி வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப் பட்டிருந்தது. | உரிய குறிக்கோள் களுக்காக ஏற்பாடுகளை பயன்படுத்த வேண்டும். | இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாத காரணத்தினால் தொடர்ந்தும் தடுத்து வைக்கப் பட்டுள்ளது. |
| (ஆ) | முறையற்ற பெறுகை நடைமுறை களை கடைபிடித்தமையால் நிறுத்தப்பட்ட 67 செயற்திட்டங் கள் தொடர்பாக காணப்படும் நடுத்தீர்ப்பு செயற்பாடுகள் இதுவரை பூர்த்தியாகாமையால் தீர்ப்பதற்கு முடியாமல் காணப்பட்ட 2 - 5 வருடங் களுக்கு இடைப்பட்ட கட்டிடட வட்டாரத்தின் கீழ் காணப்பட்ட வைப்புக்களின் பெறுமதி ரூபா 228,435,331 தொகை ஆகும். | பெறுகை நடைமுறையில் உள்ள சிக்கல்களை விரைவாக தீர்த்து காலங் கடந்த வைப்புக்களை தீர்க்க வேண்டும். | நடுத்தீர்ப்பு அலுவல்கள் பூர்த்தியாகி இருக்காமையால் தொடர்ந்தும் வைப்புக் கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. |
| (இ) | கடமையில் ஈடுபட்டிருக்கும் போது ஊன நிலைமைக்கு ஆளாகியவர்களின் நலன்புரி அலுவல்களுக்காக சீனக் குடியரசில் இருந்து கிடைத்திருந்த ரூபா 4.15 மில்லியன் இற்கான தொகை குறிப்பிட்ட கருமத்திற்கு பயன்படுத்தப்படாமையால் 2015 திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் கணக் கொன்றில் வைப்புச் செய்யப்பட் டிருந்தது. 2018 கணக்கு ஆண்டு முடிவடையும் வரை அந்த வெகுமதி எதிர்பார்த்த கருமத்திற்காக பயன்படுத்தி இருக்கவில்லை. | குறிப்பிட்ட குறிக்கோள்களு க்காக ஏற்பாடு கள் பயன் படுத்தப்பட வேண்டும். | 2019 ஆண்டின் போது இந்தப் பணத்தை பயன்படுத்தி எதிர்பார்த்த கருமத்தை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 1.6.3 கணக்கீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொலிஸின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக வெற்றிகரமான அகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு பேணப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றாக இருக்க வேண்டியதுடன் அந்த முறைமையின் வெற்றிகரத் தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற் கொள்ளப்பட வேண்டுமெனினும் அந்த மீளாய்வு எழுத்துமூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப் பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 3.8 பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஆண்டு முதல் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.6.4 முற்பணக் கணக்கு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க உத்தியோகத்தர்கான முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 1,084,624,217 தொகையாக இருந்ததுடன் அத் திகதியில் உள்ளவாறு தனிப்பட்ட மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்த கூட்டுத்தொகை ரூபா 999,885,638 தொகை ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 84,738,579 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. அந்த வித்தியாசத்தை இனங்கண்டு தேவையான சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வித்தியாசங்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த வித்தியாசம் நீண்ட காலம் முதல் காணப்பட்டதுடன் கடன் மீதிகளை பதிவு செய்யும் போது வழுக்கள் மற்றும் விடுபாட்டு வழுக்கள் ஏற்பட்டி ருந்ததுடன் வித்தியாசத்தை இனங்கண்டிருந்த போதிலும் சரியாக அனைத்துத் தகவல் களையும் இனங்கண்ட பின்னர் இனங்காணப்பட்ட வழுக்களை சரிசெய்தல் மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட 4,073 உத்தியோகத்தர்களிடம் அறவிடப் பட வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 88,696,932 தொகை ஆகக் காணப்பட்ட துடன் 03 வருடங்களை விட மிகையான நிலுவைக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 60,796,844 தொகை காணப்பட்ட போதிலும் அந்த நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்யும் தொடர் நடவடிக்கை பலவீன நிலைமையில் காணப்பட்டது. | நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தகல்கள் வட்டார மட்டத்தில் விரைவாக பெற்று தீர்ப்பதற்கு கணக்காளர்கள் மற்றும் வட்டார மட்டத்தில் நிறுவப்பட்டுள்ள கடன் அறவீடு செய்யும் குழுக்களுக்கு அறிவிக்கப்பட்டு ள்ளது. |

### 1.6.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

| அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 3.2.6 | 2019 ஜுன் 30 ஆந் திகதி அளவில் மேல் மற்றும் வட மாகாணங்களில் பண்டக் கணிப்பீட்டு அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் குறிப் பிட்ட திகதியில் பண்டக் கணிப்பீடு பூர்த்தி செய்யப் பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | வட மாகாணத்தில் உத்தியோகத்தர் பற்றாக் குறை காரணமாக குறிப்பிட்ட காலவரையறையுள் பூர்த்தி செய்ய முடியாது போனது. கணிப்பீட்டு அலுவல்களில் சுமார் 50 சதவீதம் அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டதுடன் 2019 ஆகஸ்ட் 31 திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு ள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,618,000,000 இற்கான மொத்த தேறிய ஏற்பாடுகளில் ரூபா 1,189,483,575 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு 20 சதவீதம் முதல் 84 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | ஏற்பாடுகள் உச்ச மட்ட செயற்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். | கட்டுநிதிகள் கிடைக்கப் பெறாமை, அமைச்சுகள் மாறுதல், விஷேடத்துவ உதவி குறிப்பிட்ட தினத்தில் கிடைக்கப் பெறாமை போன்ற பல்வேறு சிக்கல்கள் சேமிப்பிற்கு காரணமாக இருந்தது. |
| (ஆ) | 05 மூலதன செலவு விடயங் களுக்காக ரூபா 745,000,000 குறைநிரப்பு ஏற்பாடுகள் பெற்றிருந்ததுடன் அந்த ஏற்பாடுகளில் ரூபா 704,360,041 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. சேமிப்புகள் 60 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | குறைநிரப்பு ஏற்பாடுகள் உச்ச மட்ட செயற் திறனுடன் பயன் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கட்டுநிதிகள் கிடைக்கப் பெறாமை, அமைச்சுகள் மாறுதல், விஷேடத்துவ உதவி குறிப்பிட்ட தினத்தில் கிடைக்கப் பெறாமை போன்ற பல்வேறு சிக்கல்கள் சேமிப்பிற்கு காரணமாக ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்வதில் தாமதம் சேமிப்பிற்கு காரணமாக இருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செய்பணிகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சட்ட விரோத போதைப் பொருட்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் குற்றவாளி ஆகும் நபர்கள் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் பேணப்பட்டு வருகின்ற முன்னைய குற்றங்கள் பதிவேடு 22 பொலிஸ் நிலையங்களில் முன்னைய குற்றங்கள் பதிவேடு கணினி மயப்படுத்தப்பட்டிருக்க வில்லை. அந்த குற்றவாளிகளின் பெயர்களுக்கு உரிய ஆங்கில எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பதிவேடொன்று பேணப்படுவதுடன் சில எழுத்துக்களுக்கு உரிய குற்றவாளி களின் பெயர்கள் 2000-3000 மிகைத்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. இதன் காரணமாக உடனடியாக ஆள் ஒருவரின் முன்னைய குற்றங்களை இனங்காணல் மற்றும் ஏனைய பொலிஸ் நிலையங்களில் முன்னைய குற்றங்கள் காணப் பட்டனவான என பரிசோதனை மேற்கொள்வதற்கு இயலுமாக காணப்படவில்லை. | கணினி மயப்படுத் துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக ஆய்வுகள் மேற்கொண்டு முன்னைய குற்றப்பதிவேடுகளை கணினி மயப்படுத்துவது தொடர்பாக பொருத்தமான நடைமுறை ஒன்று தயாரிப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். |

### 3.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடையப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2011 இன் 44 ஆம் இலக்க தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனச் சட்டத்தின் V பகுதியில் உள்ளடங்கிய ''பணம்'' தொடர்பான அலுவல்களுக்கு உரிய '' தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்தின் நிதியம்'' மற்றும் சட்டத்தின் அதற்குரிய 22 முதல் 28 வரை பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்த போதிலும் நீர்கொழும்பு பொலிஸ் வட்டாரத்தின் கீழ் பயிற்சி நிறுவனம் நடவடிக்கை எடுத்திருந்தது. | தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனச் சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஆண்டு முதல் சட்டத்தின் பிரகாரம் செயற்படுவேன். |

### 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொலிஸ் கட்டளை B-9 இன் பிரகாரம் பொலிஸ் நிலையங்கள் ஆரம்பிக்கும் போது சமர்ப்பிக்கப் படும் விடயங்கள் மீது தரப்படுத் தப்பட்ட போதிலும், இதற்காக தெளிவான தேர்வுமுறைகள் தயாரித்திருக்கவில்லை. | தேர்வுமுறைகள் தயாரிக்கப்பட வேண்டும். | பொலிஸ் நிலையங்கள் தரப்படுத்தல் தொடர்பாக தேர்வு முறை தற்போது தயாரிக்கப்பட்டு வருவதுடன் அந்தத் தேர்வு முறை வளவாளர் குழு ஒன்றிற்கு சமர்ப்பித்து மீளாய்வு மேற் கொண்ட பின்னர் வெளியிடப்படும். |
| (ஆ) | பொலிஸ் நிலையம் நிறுவப்பட்ட சந்தர்ப்பத்தில் தரப்படுத்திய பின்னர் மீண்டும் மீளாய்வு மேற்கொண்டிருக்காத போதிலும் அந்த தரத்தை அடிப்படையாக கொண்டு பொலிஸ் நிலைய அதிபர் கொடுப்பனவு மற்றும் அனுசரணைச் செலவுப் படி மாதாந்தக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | காலத்துக்கு பொருத்தமாக மீளாய்வு மேற்கொள்ளப் பட்டு அதன் படி கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும். | பொலிஸ் நிலையங்களை புதிதாக தரப்படுத்தல் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் சமர்ப்பிக்கும் செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் பிரகாரம் தற்காலத்திற்கு பொருத்தமான பொலிஸ் நிலைய அதிபர் படி மற்றும் உபசரணை செலவுப் படி பெற்றுக்கொள்ளும் இயலுமை காணப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ரூபா 17.53 மில்லியன் தொகை பெறுமதியான 05 இருப்பு விடயங்களைச் சேர்ந்த 8,873 அலகுகள் இருப்புச் சேதங்களும், ரூபா 27.76 மில்லியன் பெறுமதி யான 08 இருப்பு விடயங்களைச் சேர்ந்த 103,660 அலகுகள் குறைவும், ரூபா 22.48 மில்லியன் பெறுமதியான 5 விடயங்களைச் சேர்ந்த 11,499 அலகுகள் மற்றும் ரூபா 21.02 மில்லியன் பெறுமதியுடைய 61,000 மீற்றர்கள் காக்கிக் புடவை மிகையும் அவதானிக்கப் பட்டது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | விசாரணையை விரைவாக பூர்த்தி செய்து அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேற்கொள்ளப்பட்ட விசாரணை யின் முன்னேற்றம் பின்னர் அறிவிக்கப்படும். |
| (ஈ) | 2017 ஆம் ஆண்டின் போது ஹெரொயின் மற்றும் கஞ்சா தொடர்பாக கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை முறையே 29,288 மற்றும் 51,788 தொகை எனினும், மீளாய்வாண்டின் போது முறையே 40,987 தொகை மற்றும் 54,685 தொகை வரை அதிகரித்திருந்தது. | சுற்றிவளைப்பு க்கள் வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு ஒத்தநிகழ்வாக பயன்படுத்தலை குறைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | பதில்கள் அனுப்பியிருக்க வில்லை. |

**3.4 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016-2018 இடைக்கால பாதீட்டு சட்டகத்திற்குள் 04 நிர்மாண வேலை செயற்திட்டங்களுக்காக ரூபா 341.09 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 04 செயற்திட்டங்களும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட காலப் பகுதியில் செயற் திட்டங்களை பூர்த்தி செய்யவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 நவம்பர் 15 ஆம் திகதி ரூபா 482.42 மில்லியனுக்காக நிர்மாண வேலை உடன்படிக்கை ஒன்றிற்கு அணுகியிருந்த கொழும்பு குமாரரத்னம் மாவத்தையில் அமைந்துள்ள விவாகமுற்றோருக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தல செயற்திட்டத்தின் நிர்மாண வேலை 2019 மே மாதம் வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்டத்தின் தாமதம் தொடர்பாக விரைவாக மற்றும் பொருத்தமாக நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். | பதில் கிடைத்திருக்க வில்லை. |

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 திசெம்பர் 10 ஆம் திகதிய மற்றும் அமப/15/1707/741/001 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக த்தினால் இணைக்கப்பட்ட ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளம் பொலிஸினால் மீளளிப்புச் செய்ய வேண்டிய துடன், 2018 ஆண்டின் போது ரூபா 15.21 மில்லியன் செலுத்தப் பட்டிருந்த போதிலும் இந்தத் தொகையை மீளளிப்புச் செய்திருக்கவில்லை. | சம்பளம் மற்றும் படிகள் மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீளளிப்புக்காக எல்லா மாதங்களிலும் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு விபரங்கள் உரிய நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இங்கிரிய நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2018 மார்ச் 19 ஆம் திகதி இங்கிரிய பிரதேச செயலகத்தினால் இலங்கை பொலிஸிற்கு சாட்டுதல் செய்யப் பட்டிருந்த 3.9842 ஹெக்டயர் காணியில் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக ஆரம்பிக்கப் பட்டு ரூபா 8,895,273 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த அலுவல்கள் தற்போது நிறுத்தப்பட்டிருந்தது. காணியை சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டு எல்லைகளை அடையாளப்படுத்தி இருக்காத துடன் மொத்தக் காணியும் காடுகள் வளர்ந்து காணப்பட்டது. | காணியை உச்ச மட்ட செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு எடுக்க வேண்டும். | இங்கிரிய பிரதேச செயலாளரின் சாட்டுதல் சான்றிதழின் பிரகாரம் 3.9842 ஹெக்டயர் அளவை கொண்ட 4 காணித் துண்டுகள் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. தற்போது காணிப் பகுதி யில் சேகரமாகியுள்ள குப்பைகள் அகற்றப் பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் குப்பைகள் போடப்படக் கூடாது என பானந்துர வட்டார பொறுப்பதிகாரியினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (இ) | பொலிஸ் குதிரை ஏற்ற பிரிவு மற்றும் பொலிஸ் படைவீரர் பராமரிப்பு நிலையம் நிர்மாணிப்பதற்காக ஹொரண எல்லகந்த வத்த இறப்பர் காணியில் 75 ஏக்கர் 2017 ஆண்டின் போது உரித்தாக்கி இருந்த போதிலும் நிர்மாண வேலைகள் தொடர்பான அலுவல்கள் ஏதும் 2019 ஆகஸ்ட் மாதம் வரை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. காணி அந்த அலுவல்களுக்காக பொறுத்தமானதான என ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. காணியின் விளைச்சல் களை பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தாக்கப்பட்ட காணி எதிர்பார்க்கப் பட்ட குறிக்கோளு க்காக பயன்படுத்து வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணிப் பகுதியை உரித்தாக்குவதற்கு எதிராக ஆரம்ப குத்தகை யாளர் கொடகல பெருந் தோட்ட கம்பனி மேன் முறையீட்டு நீதிமன்றத்திற்கு சென்றிருந்த காரணத்தினால் வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது.<br>காணியை சுற்றி வேலி ஒன்று நிர்மாணிப்பதற்காக மொத்த மதிப்பீடு ஒன்றிற்காக அமைச்சரவை யின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு அலுவல்கள் மேற்கொள்ளப் படுகின்றன. வழக்கொன்று இருப்பதனால் விளைச்சலை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | காலி, மாத்தறை, தங்காலை மற்றும் எல்பிடிய பொலிஸ் அத்தியட்சகர் வட்டாரங்களை சேர்ந்த சுமார் 133 உத்தியோகத்தர்கள் உத்தியோக பூர்வ வாசஸ்தலங்கள் விண்ணப்பியிருந்த போதிலும், ஹபராதுவ ''நில ஸெவன'' வீடமைப்புத் திட்டத்தில் இருந்து ரூபா 729,600,000 தொகைக்கு 192 வீடுகள் கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. 2019 ஏப்ரல் 02 திகதி அளவில் ரூபா 500 மில்லியன் தொகை 05 சந்தர்ப்பங்களில் செலுத்தப் பட்டிருந்த போதிலும், 2019 ஜுன் 18 திகதி வரை வாசஸ்தலம் ஏதும் இலங்கை பொலிஸுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் ஒன்று வழங்கும் போது கவனம் செலுத்த வேண்டிய கடமை நிலையத்துக்கு இலகுவாக நெருங்கக் கூடியமை மற்றும் பொது வசதிகள் ஆகியன தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | கோரிக்கை ஒன்று இன்றி 130 வீடுகள் கொள்வனவு செய்தல் தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டி இருந்ததுடன் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் கொள்வனவு செய்யும் போது உத்தியோகத்தர்களின் வசதிகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | பதில் கிடைத்திருக்க வில்லை. |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளகக் கண்காய்வு அலகில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி மற்றும் 60 கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிகளில் 32 வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் அலகின் உச்ச செயலாற்றலுடன் நெருங்குவதினை பாதித்துள்ளது. | குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காளர் சேவையில் காணப்படும் உத்தியோகத்தர் களின் பற்றாக்குறை காரணமாக உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்ய முடியாமல் உள்ளது. கணக்காய்வு உத்தியோகத்தருக்காக பதிலாக உத்தியோகத்தர் வழங்க முடியாமையினால் ஏனைய அலுவலகங்களில் இருந்து உத்தியோகத்தர்களை விடுவித்துக் கொள்ளும் கடினத் தன்மையொன்று காணப்படுகின்றது. |

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இணைக்கப்பட்ட பதவியணி 97,849 தொகை ஆக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணி 82,596 தொகை ஆகும். அதன் படி வெற்றிடப் பதவிகளின் எண்ணிக்கை 15,569 மற்றும் மிகை எண்ணிக்கை 316 ஆகும். சிரேஷ்ட மட்டத்தில் 361 பதவிகள் மற்றும் மூன்றாம் மட்ட பதவிகள் 947, இரண்டாம் மட்ட பதவிகள் 13,688 மற்றும் ஆரம்ப மட்டப் பதவிகள் 573 தொகைக் கான வெற்றிடம் காணப்பட்ட போதிலும் அதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | குறிப்பிட்ட ஆட்சேர்ப்புகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பதில் கிடைத்திருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொலிஸ் சீருடைப் பதவியணி யைச் சேர்ந்த 05 பதவிகள் மற்றும் பொலிஸ் உதவிச் சேவையை சேர்ந்த 83 பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறை தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்த பின்னர் திருத்தப்பட்டிருந்த போதிலும் அந்த திருத்தங்களை உட்படுத்தி சான்றுபடுத்தி சமர்ப்பித்திருக்கவில்லை. | குறிப்பிட்ட திருத்தங் களை உட்படுத்தி சான்றுபடுத்துவதற்காக விரைவாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதில் கிடைத்திருக்க வில்லை. |
| (இ) | பொலிஸின் சீருடை பதவியணி பொலிஸ் நிலைய மட்டத்தில் பகிரப்பட்டுள்ள முறை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை ஒன்று காணப்படாத துடன் பொலிஸ் நிலையம் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை காலத்திற்கு காலம் திருத்தப்படாமல் தொடர்ந்தும் காணப்படுதவதால் சில பொலிஸ் நிலையங்களில் மிகையும் சில பொலிஸ் நிலையங்களில் குறைவான எண்ணிக்கையும் காணப்பட்டது. | உரிய காலத்தில் மீளாய்வு மேற்கொண்டு பொலிஸ் நிலைய மட்டத்தில் இருக்க வேண்டிய பதவியணியை இனங்கண்டு அங்கீகரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் கிடைத்திருக்க வில்லை. |
| (ஈ) | பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்தின் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிப்பதற்கு உத்தேசித்துள்ள பதவியணி 351 ஆக இருந்த போதிலும் அத் திகதியில் உள்ளவாறான பதவியணி 245 ஆகும். அதன் பிரகாரம் 106 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், வெற்றிடங் களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிக்கப்பட்ட பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் கிடைத்திருக்க வில்லை. |